# ஞானம் வேண்டாம்!

"பானு! பானு!" என்று இரண்டு குரல் கூப்பிட்டேன், வாசற்கதவைப் பன்முறை தட்டிவிட்டு.பதில் ஏதும் வராதது கண்டு ஆச்சர்யப்பட்டேன்.

"இன்று கிழமை - ஞாயிற்றுக் கிழமை அல்லவே!" என்றும் உடனே நினைவுப்படுத்திக் கொண்டேன்.

அவள் கணவர் ஆபீசுக்குப் போயிருப்பாரே! அவர் அகத்தில் இருக்கக் கூடுமானால் நான் வருவேனா? இளம்தம்பதிகளான அவர்கள், ஓய்வு நாளான ஞாயிற்றுக்கிழமையன்று தான் "செஸ்" விளையாடிக்கொண்டு, அளவளாவிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட நாட்களில் நான் வருவதில்லை. எனினும், என் கணவர் "டூர்" போய்விட்டதால், கிழமை தெரியாமல் வந்துவிட்டேனோ என்ற சந்தேகம் வந்தது. இன்று கிழமை திங்கள் என்று உறுதி செய்து கொண்டு, மறுபடியும் "பானு!" என்று உரக்கக் கூப்பிட்டேன்.

"உம்! - சுப்புவா? இதோ வருகிறேன்!" என்ற மறுமொழி வந்தது. சில வினாடிகளுள் கதவு திறக்கப்பட்டது.

கதவைத் திறந்த பானுவின் தோற்றம் என்னைத் தூக்கிவாரிப்போட்டது. நான் முதலில் கதவைத் தட்டிக் கூப்பிட்டபொழுதெல்லாம், அவள் ஏதோ 'சீவனும்,' 'சுரத்தும்', அற்றவளாய் சோர்ந்து கிடந்திருக்க வேண்டும். நான் கூப்பிட்டதை அவளால் அறிந்து கொள்ளமுடியவில்லை.

"பானு! இதென்னடி! உன் உடம்புக்கு என்ன? 'பொக்கு'ன்னு போய்விட்டதே ஒரு மாதத்திலே! என்றேன் எடுத்த எடுப்பிலே.

"ஒன்றுமில்லையே, வா உள்ளே" என்று கூறிவிட்டு என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். ஒன்றுமில்லையென்று ஏன் மறைக்கப் பார்க்கிறாய்? முகம் சொல்கிறதே! உண்மையைச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உனக்கு மசக்கையென்று செய்தி பரப்பி விடுவேன்!" என்றேன் கடுமையும் அன்பும் தோன்ற.

"மனதிலே இருக்கிற சங்கடத்திற்கு, இதுதாண்டி ஒரு குறைச்சல்!" என்றாள் அவள், கீழே அசதியுடன் படுத்தவாறு.

"அப்படி வா, வழிக்கு! மனசு சங்கடம் எதனாலே என்பதைத் தான் எனக்குச் சொல்லேன். சொல்லாமல் குமுறிக்கொண்டு, உடம்பை உருக்காதே, ஒரு மாதத்திலே இவ்வளவு மாறுதலா காணப்படும்? ஒன்றும் மறைக்காதே!" என்று தேற்றினேன் பானுவை.

"சொன்னாலும் வெட்கக்கேடு! நீயே பரிகாசம் செய்தாலும் செய்வாய்! சொல்லாவிட்டாலும் தாங்கமுடியாத பாரம், குழப்பம்! நான் என்னடி செய்வேன்? .... உம். ஏன்தான் அப்படியெல்லாம். நடக்கணுமோ சொன்னால், பிறத்தியாருக்கு பிரமாதமாயிராது - ஆனால் எனக்கு என்னமோ பிரமாதமாகத்தான் தோன்றுகிறது!" என்று தயங்கித் தயங்கி, என்னிடம் கூற முன் வந்துவிட்டாள் பானு.

மலர்களை உதிர்க்கக் காத்திருக்கும் மகிழ மரத்தை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டால், பூக்கள் கொட்டுமே, அதுபோல என்னிடம் சங்கதிகளையெல்லாம் கொட்டிவிட்டாள் பானு.

சந்தோஷம் நிறைந்த மனதில், முதன் முதலில் ஒரு சிறு புரைசல் ஏற்பட்டாலும், அது மிக மிக பிரும்மாண்டமாகவே தோன்றும். அதைச் சமாளிக்கும் வகை புலனாகாது; மலைப்புத் தட்டும். மனமும் உடலும் சோர்வுறும்.

இதை நான் அறியாதவளா? பாவம், அவளுடைய குழப்பத்தைக் கண்டு நான் நகைப்பேனா என்று பயந்தாள். ஆனால் அவளுடைய மனநிலைமையை நான் நன்கு உணர்ந்தேன்.

பானுவின் இல்வாழ்க்கையின் இன்பத்திலே இதுவரை ஒரு சிறு மாசும் புகுந்தது கிடையாது. அவளுக்கும், அவள் கணவனுக்குமிடையே தோன்றியிருந்த அன்பும், அந்த அன்பின்மேல் அவர்களுக்கிருந்த உறுதியும் வியக்கத்தக்கவை. ஆனால் இப்போது பானுவின் மனதிலே ஒரு சிறு களங்கம் உண்டாகியிருந்தது. அதை அவளாலேயே தாங்க முடியவில்லை.

புதிதாகப் பிறந்திருக்கும் மகவினிடம் காணப்படும் ஊனம் எப்படி ஒரு தாயை வேதனை செய்யுமோ - தீட்டி முடித்த சித்திரத்திலே ஒரு பழுது ஏற்பட்டுவிட்டால் எப்படி ஒரு சைத்திரிகன் மனதிலே துயரம் வாட்டுமோ - அப்படிப்பட்ட ஒரு நரகவேதனை, பானுவின் மனதைக் கவ்வியிருந்தது.

அவளுடைய கணவன் ரகுவின் ஆபீஸ் சகபாடி நரசிம்மன், தன் மனைவி ஜயத்துடன் இவர்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவதுண்டு. இவர்களிருவரும் கூட அவர்கள் இல்லத்திற்கு பன்முறை போய்வருவார்கள். புருஷர்களும் நெருங்கிய நண்பர்கள், பெண்கள் இருவரும் நெருங்கிய தோழிகள், ஆதலால் ஞாயிறு தோறும் பீச்சுக்கும், சினிமாவுக்கும் மற்றும் பல இடங்களுக்கும் நால்வரும் சேர்ந்தே போய்வருவார்கள் குஷியாய்.

பானு கொஞ்சம் பேச்சுக்காரி. கொஞ்சம் பழகிவிட்டால், யாருடனும் வெகு சரளமாகப் பேசிப் பழகுவாள். ஜயம் யாருடனும் வாய்விட்டு நாலு வார்த்தை கடகடவென்று பேசமாட்டாள். அதனால், பானு நரசிம்மனுடன் பேசுவதுபோல, ஜயம், ரகுவுடன் பேசமாட்டாள். முதலில் பானுவுக்குத் தான் மட்டும் நரசிம்மனுடன் அதிகம் பேசுவது ஜயத்திற்குத் தவறாகப்படுமோ என்ற அச்சம் இருந்தது. ஆனாலும் ஜயத்தின் சுபாவம் அறிந்தபின், அவள் வேற்றுமை எண்ணத்தை அறவே அகற்றிவிட்டாள்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜயம் பிறந்தகம் போய்விட்டாள். அதிலிருந்து நரசிம்மன் இவர்களகத்திற்கு வருவது அதிகமாயிற்று - ஆனால் என்ன காரணமோ, அவர் வருவது குறையாதா என்றே பானுவின் அந்தரங்கம் விரும்பியது.

"பாவம், வீட்டிலே பொழுதுபோக்கிற்கு மனைவியில்லை; இங்கே இவருடன் பொழுது போக்க வருகிறார். நியாயந்தானே? நமக்கேன் காரணமற்ற வெறுப்பு ஒருவர் மீது?" என்று தன்னையே கடிந்து கொண்டாள் ஆதியிலேயே.

அப்படியிருந்தும், பானுவுக்கு இரண்டாம் தடவை அதிருப்தி எழுந்தது. நரசிம்மனை ஞாயிறு தோறும் தங்களுடன் வரும்படி ரகு அழைத்தபோது, அவர் உடனே அதற்கு ஒப்புக்கொண்டது இவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

"எதற்கு அவர் ஒருத்தர்கூட! ஏதோ ஜயம் இருந்தபொழுது, அப்படிப்போவது தமாஷாக இருந்தது! இப்போது இவர் எதற்கு மூன்றாம் மனுஷர் வரணுமாம்?" என்று எண்ணமிட்டாள்.

நரசிம்மனுடன் அதிகம் முகங்கொடுத்துப் பேசவே அவள் விரும்பாதபொழுது, ஏதோ காரணம் புலனாகாத அதிருப்தி உண்டாகியிருந்தபொழுது, அவருடன் தன் கணவனின் நட்பு வளருவது அவளுக்கு எப்படி உவகை தரும்? எனினும், தன் வெறுப்பை அவள் வளர்க்க விரும்பவில்லை.

"ஜயம் இல்லாததால் அவருடன் பேசுவதைத் தவிர்க்க என்னால் முடிந்ததா? அதுபோல அவரும், பழகினதோஷம்? வந்துவிட்டுப் போகிறார்! நமக்கேன் பாடு!" என்றே மனதில் தோன்ற இடமளித்தாள், மீண்டும்.

ஆனால் அந்தச் சமாதானமும் நிலைக்கவில்லையே, பாவம்! மேலும் மேலும் சந்தேகமும் அதிருப்தியும் ஏற்படும்படியாகவே சம்பவங்கள் நிகழ்ந்ததால அவள் மட்டும் என்ன செய்வாள்! "நரசிம்மன் நல்லவர் தானா?" என்ற கேள்விக்கு, "இல்லை! இல்லை!" என்ற பதிலே அந்தரங்கத்திலிருந்து எழுந்ததால், என்ன செய்வாள் பானு! வானத்திலே இடி இடிப்பதற்கும், கடலிலே அலை எழும்புவதற்கும் காரணங்கள் கூற முடியுமா, அல்லது அவற்றைத் தவிர்க்கத்தான் முடியுமா? அப்படித்தானே மனமும், ஆராய்ச்சிகளுக்கு உட்படுவதில்லை! ஒருநாள் பஸ்ஸில், பானு, அடுத்து ரகு, அவர்க்கு அடுத்து நரசிம்மன் - என்று வரிசைக்கிரமமாக அமர்ந்திருந்தார்கள். பஸ்ஸில் கூட்டம் இருந்தாலும், அப்படி வரிசைக் கிரமமாகப் பார்த்து உட்கார முடிந்ததே என்று சந்தோஷப்பட்டாள் பானு.

ஒரு பெண்மணி அப்போது பஸ்ஸில் ஏறினாள். அவள் நிற்க வேண்டியிருந்ததைப் பார்த்து, மரியாதை தெரிந்த ரகு, சட்டென இடத்தைவிட்டு எழுந்து, அந்தப் பெண் உட்கார இடம் தந்தார்.

பானுவும், "உட்காருங்கள்" என்று அந்தப் பெண்ணிடம் கூறிக்கொண்டிருக்கையில், திடீரென்று நரசிம்மன், பானுவைப் பார்த்து, அவளை தான் அமர்ந்திருந்த பக்கம் நகர்ந்து அமரும்படி கூறி, நின்றுகொண்டிருந்த பெண்ணை, பானுவின் ஸ்தானத்தில் அமரச் செய்யும் நோக்கத்தை வெளியிட்டார்.

தீயை மிடித்தவள் போலானாள் பானு! "வேண்டாம்!" என்று கடுகடுப்புடன் கூறிவிட்டு, அந்தப் பெண்ணையே காலியிடத்தில் உட்காரச் சொன்னாள். அந்தப் பெண் அதற்கு, "நீங்கள் இருவருமே அப்படி உட்காருங்களேன்?" என்றாள். ஆனால் பானு ஏன் நகருவாள்? நகரவேயில்லை கடைசியில் அந்தப் பெண் காலியிடத்தில் அமர்ந்தாள்.

பானு, நின்றுகொண்டிருக்கும் கணவன் முகத்தைப் பார்த்தாள். அதிலே ஒரு மாறுதலும் காணப்படவில்லை. தான் வாய் திறந்து கூறாமலேயே, கணவன் மனது நரசிம்மனை வெறுக்காதா என்று எதிர்பார்த்த அவளுக்கு, அவனுடைய சலனமற்ற முகம், கோபத்தையே எழுப்பியது.

"இப்படியுமா ஒரு புருஷன் இருப்பார், அப்பாவியாக!" என்று முதலில் கோபம் வந்தது. அப்புறம் அது நரசிம்மன் மேலே அருவருப்பாக மாறியது, பானுவுக்கு.

"மரியாதை தெரியாத மனுஷன்! ஒரு பெண்ணுக்கு எழுந்து இடமளிக்க 'இவர்' சட்டென எழுந்தாரே, அவருக்குத் தோன்றிற்றா? எனக்கு உபசாரம் செய்கிறாராம். நகர்ந்து வந்து உட்காரு என்கிறார் கூச்சமில்லாமல்! மூன்றாம் மனுஷனாய் லட்சணமாய், தான் எழுந்து நிற்காவிட்டாலும், வாயைத் திறவாமல் உட்காருவதற்கு என்ன கேடு! - சே! அசல் புருஷனை, கணவன் என்று ஒருத்தி நினைக்கும்படியல்லவா நடந்துவிட்டது!" என்று மனங்கொதித்தாள்.

கூடவா!" என்று நரசிம்மனை அழைக்காதேயுங்கள்!" என்று கணவனிடம் கூறத் துடித்தாள் அவள். ஆனால் அதற்கும் துணிவு வரவில்லை!

"அவருடைய மனது கல்மஷமற்றதாச்சே! கண்களால் காணும்போதே ஒன்றையும் கிரகிக்க முடியவில்லை. பிறரைக் குறை கூறலாகாது என்ற எண்ணம் உடையவரிடம், நான் வார்த்தைகளால், என்ன நம்பிக்கை புகட்ட முடியும்? தாமாகவே தோன்றக்கூடிய உணர்ச்சிகளான பொறாமை, அருவருப்பு முதலியன இதுவரை அவர் உள்ளத்தில் தோன்றாத போது நாம் கூறியா தோன்றும்?" என்ற சந்தேகமும் தயக்கமும் பானுவுக்கு உண்டாகிவிட்டன. கணவனிடம் ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்த வாரம் கணவன் சினிமாவுக்குப் போகலாமென்றபொழுது, இவளுக்கு, தான் வரவில்லை என்று கூறவே விருப்பம். ஆனால் அன்புடன் கணவன் அழைக்கும்போது, அப்படிக் கூறவும் இஷ்டமில்லை. மூவருமாகவே போனார்கள்.

அந்தப் படத்திலே கதாநாயகியாக நடிக்கும் நடிகை 'ரத்னமாலா'வை பானுவுக்கு ஒப்பிட்டு பலர் கூறுவார்கள். நானே கூறியிருக்கிறேன். அவள் கணவனும் அவளிடம் கூறியிருக்கிறார். அழகுக்குப் புகழ்பெற்ற அந்த நடிகைக்குத் தன்னை நாங்கள் ஒப்பிடுவதை அவள் பெருமையுடனும், சந்தோஷத்துடனும் ஏற்றிருக்கிறாள். ஆனால் நாங்கள் கூறிய போதெல்லாம் பெருமையடைந்த அவள் உள்ளம், அன்று நரசிம்மன் சினிமாக் கொட்டகையில் வெளியிட்டபோது சிறுமையுடன் ஏற்கிறது. ஆனால் அப்போதும் தன்னைத்தான் கடிந்துகொண்டாள் பானு.

"எல்லோரும் கூறுவதைத்தானே அவரும் கூறுகிறார். நாமேன் அதைத் தப்பாக நினைக்க வேண்டும்?" என்று சமாதானம் செய்துகொண்டாள்.

"நம் மனதில் இத்தகைய போராட்டங்கள் நடக்காமல் தவிர்க்க வழி, இனி நாம் அவர்களிருவருடனும் எங்கும் போகக்கூடாது!" என்று உறுதி செய்துகொண்டாள்.

ஆனால், அடுத்தவாரம், மாதம் பிறந்து சம்பளம் வந்திருந்தால் வீட்டுக்குத் தேவையான சாமான்களை அவளும் பார்த்து வாங்க வேண்டியிருந்தது.

"இந்த வாரம் மட்டும் போகலாம்" என்று அவர்களுடன் சென்றாள்.

ஒரு புஸ்தகக் கடையருகே வந்தார்கள் மூவரும். புஸ்தகங்கள் வாங்க உள்ளே நுழையும் சமயம் ரகு; "பானு! நீ புஸ்தகங்களைப் பார்த்து எடுத்துவை. நான் இதோ பக்கத்துக் கடையில் டூத் பேஸ்ட்', 'ப்ரஷ்' வாங்கிவருகிறேன்!" என்றார். "நான் மட்டும் தனியாயிருப்பதா, நானும் வருகிறேன்!" என்றாள் இவள் தொண்டையில் ஏதோ வருத்தம் அடைக்க, "தனியென்ன, நரசிம்மன் இருப்பான்! நான் ஒரு நொடியில் வந்துவிடுவேன் இரு!" என்று கூறிவிட்டு ரகு விரைந்து சென்றுவிட்டான்.

"பேஷ்! நரஸிம்மன் நல்ல துணை!" என்று எண்ணிய பானுவிற்கு, தன் கணவன் நரஸிம்மனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டுதான் அவ்வாறு செய்கிறானா, அல்லது நரஸிம்மனைப் பற்றித் தெரிந்துதான் அவ்வாறு செய்கிறானா என்ற சந்தேகம் எழுந்தது.

ஆனால் கணவன் நரஸிம்மனுடன் கொண்டாடும் தூய்மையான நட்பு முறையையும், கணவனின் முகபாவத்தையும் ஆராய்ந்த பின்பு அந்த ஐயம் அறவே அகன்றது.

"ஆகா! 'இவரைப்போல யார்தான் இருப்பார்கள்! இந்த நரஸிம்மனுக்கும், அவருக்கும் மலைக்கும் மடுவுக்கும் வித்தியாசம், குணங்களில்! ஆனால் நட்பு பிணைக்கிறது இருவரையும்! என்ன விந்தை!....." என்ற பற்பல எண்ணங்களில் ஈடுபட்டவளாய், புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த பானுவுக்கு, நரஸிம்மனிருக்கும் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூட இஷ்டமில்லை.

"பானு! இதோ, பார்!" என்ற வார்த்தைகள் நரஸிம்மனிடமிருந்து வெளிவந்தவை என்றறிந்த பானு, வேண்டா வெறுப்புடன் குனிந்த தலையை நிமிர்த்தினாள்.

"இந்தக் கண்ணைப் பார்த்தாயா? அசல் உன் கண் மாதிரி!....... உம்,..... உன் கண்ணேதான் அதோ!" என்றார் அவள் கண்ணையும் உற்று ஒரு முறை பார்த்துவிட்டு புஸ்தகத்தில் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினார் நரஸிம்மன்.

ஆங்கில மாதப் பத்திரிகையொன்றில், "அழகிய கண்கள்" என்ற தலைப்பின் கீழ் பலவிதக் கண்களின் புகைப்படங்கள் காணப்பட்டன. நம்மவர் "கருவண்டுபோல" என்று வருணிக்கும் ஓர் கண்ணின் புகைப்படத்தைக் காட்டித்தான், நரசிம்மன் பானுவிடம் பேச்சுக்கொடுத்தார். அதைப் பார்த்த பானுவிற்கு, நரசிம்மன், நரசிம்ம சொரூபமாகத் தோற்றமளித்தார். அவளுக்கும் அதே அவதாரம் எடுக்கவே ஆவேசம். ஆனால் அமைதியைக் கடைப்பிடித்தாள்.

"உம், இருக்கலாம்!" என்று சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு, மறுபடியும் புஸ்தகங்களை ஆராய்வதுபோல் அபிநயிக்கலானாள்.

"அவர் வந்துவிடணும் சீக்கிரமாக! . . . ஆகா, அவர் இல்லாத சமயம், என்னிடம் என்ன அந்தரங்க வர்ணனை இந்த மனுஷருக்கு!" என்றெல்லாம் கொதித்துக் கொண்டிருந்தது பானுவின் உடம்பில் ஒவ்வொரு அணுவும்.

"ஐயம்! என்று ஒரு தடவையாவது என் கணவர் அவளைக் கூப்பிட்டதுண்டா? "நீங்கள்" என்று பன்மை வைக்கப் பேசுவாரே! இந்த நரசிம்மன் என்னை பானு!, பானு! என்று அழைக்கிறாரே, என்ன அசிங்கம்! சகஜம், சகஜம் என்றாலும் எதற்கும் ஒரு வரம்பு இல்லையா? அகத்திற்குப் போனதும் அவருக்கு நான் நினைப்பதையெல்லாம், சொல்லிவிட்டுத்தான் மறு காரியம்!" என்று உறுதி செய்து, கொண்டாள்.

ரகு வந்தார் சிறிது பொறுத்து, படபடப்பு மிகுந்திருந்த பானு, "ஏன் இவ்வளவு நேரம்? என்றாள் சிறிது கடுமையாவே.

"எத்தனை நாழியாச்சு!.... பதினொரு நிமிஷம்! இது கூட ஆகாதா கடையென்றால்!" என்று கூறிவிட்டு, பக்கத்தில் நிற்கும் பானுவையும் அழைத்துக்கொண்டு, நரசிம்மனுடன் அளவளாவ ஆரம்பித்துவிட்டார் ரகு.

"இவரிடம் நரசிம்மனைப் பற்றி குறை கூறினால், பயன் ஏதும் இராது!" என்று அப்போது உறுதியாக உணர்ந்த பானு, வேறுவித யோசனைகளில் இறங்கினாள்.

"கணவனின் நேர்மையற்ற குணத்தை, ஜயமா அறிந்திருக்கமாட்டாள்! நாம் நினைப்பதுபோலதான்.... நான் நரசிம்மனைப் பற்றி அபிப்பிராயம் கொண்டிருப்பதுபோலவேதான்.... அவளும் நினைக்கிறாளா, பார்த்துவிடுவோம்!" என்ற முடிவிற்கு வந்த பானு, மறுநாளே பிறந்தகத்திலிருக்கும் ஜயத்திற்கு ஒரு கடிதம் எழுதினாள்.

பலவிஷயங்களைப் பற்றி லேகோபிரம்மாய் எழுதி முடித்த பின்பு, பேச்சுவாக்கிலே சொல்வதுபோல.

"என்ன இருந்தாலும் புருஷர்களை நம்பிவிடலாகாது ஜயம்! இன்றைக்கு, அவர்கள் கண் முன் நாம் இருக்கும்போது, நம்மைவிட்டால் தங்களுக்கு உலகம் கிடையாது என்பார்கள், நமக்கு நிகர் இல்லையென்பார்கள். ஆனால் நாளை நாம் மறைந்தால், அந்தப் பேச்சு வேறொருத்தியிடம். 'ஆள் போனால் ஆட்டம் போச்சு!' என்பது புருஷர்களுக்கு மிகவும் பொருந்தும்!" என்று எழுதியிருந்தாள்.

"ஜயம் 'ஆம்' என்பாளாயின், நம் அபிப்பிராயம் சரியே!" என்று எண்ணிக்கொண்டே, தபாலுக்கு அனுப்பினாள் கடிதத்தை. பானு பாவம் எந்த வேளையில் அந்தக் கடிதத்தை எழுதினாளோ, அது அவளுக்கு வினையாக வந்து சேர்ந்தது.

அந்தக் கடிதத்தை எழுதும்போது, பானு, "இந்தக் குற்றச்சாட்டு, என் கணவரை மட்டும் சாராது. மற்ற புருஷர்களை - முக்கியமாக நரசிம்மனையே இது தாக்குகிறது!" என்று எண்ணமிட்டாள்.

ஆனால், அந்தோ, தன் கணவனையே தாக்கும்படியாகப் பரிணமித்துவிட்டது! இப்போது இவள் கடிதத்திற்கு ஜயம் விடுத்த பதில்தான் - இவள் எதிர்பாராத அந்தப் பதில்தான் - இவள் சிறிதும் எதிர்பார்க்காத அந்த மனமாறுதலுக்கு ஏதுவாயிற்று.

"புருஷர்களை நம்பலாகாது என்றுதான் உலகத்திலே கூறுவது சகஜம். ஆனால் எல்லா ஆடவர்களையும் ஒருமிக்கப் பழிப்பது தவறு! உத்தம புருஷர்கள் உலகில் எப்போதும் சிலர் உண்டு. நான் ஒரு லட்சிய புருஷனின் மனைவியென்றும் பெருமிதம் எனக்கு உண்டு. உனக்கு அது போன்ற பெருமை கிடையாதா?" என்று எழுதியிருந்தாள் ஜயம்.

"ஐயோ, இதென்ன! தன் புருஷன் லட்சிய புருஷன் என்கிறாளே ஒரே நிச்சயமாக! அவளுக்கு, மனைவி ஸ்தானத்திலே, புருஷனின் குறைபாடுகள் தெரியவில்லையா?"

"ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்! இல்லாவிட்டால், இந்த நரசிம்மனைப் பற்றி நாம் நினைப்பதென்ன, அவள் நினைப்பதென்ன! மனைவியின் அன்பென்னும் அஞ்ஞானம் திரையிட்டுவிட்டது பாவம் அவளை....!"

"ஆ! அப்படியானால் . . நான்! . . . நான் மட்டும் ஒரு மனைவி ஸ்தானத்தில் இல்லையா?...... என் கணவர் குணக்குன்று, அன்பின் உரு என்று நினைக்கிறேனே இதுவும் பிரமைதானோ, அஞ்ஞானம்தானோ!..... என் கணவர் நான் நினைப்பதுபோல, பிறருக்கு உத்தமராய் தோன்றுவதில்லையோ?"

"ஆமாம்! உண்மையில் நான் நினைப்பதுபோல் குணக் குன்றாக, ஆதரிச புருஷராக அவர் பிறருக்குத் தோன்றுவதில்லைபோலும்! இல்லாவிட்டால், ஜயம் கேட்பாளா, எனக்குத் தன்னைப்போல பெருமை உண்டா என்று!"

இப்படி ஒரு சிந்தனைச் சுழலில் அவளை மாட்டி வைத்துவிட்டது ஜயத்தின் கடிதம்.

அன்றிலிருந்து இன்றுவரை ஓயாத யோசனைகள், தெளிவு தராத ஆராய்ச்சிகள், முடிவு அற்ற குழப்பங்கள் அவள் உள்ளத்தில்.

"என்ன இருந்தாலும், நரசிம்மனைப்போல என் கணவர் இரார்!" என்ற எண்ணமும் அவளை விட்டகலவில்லை.

"இந்த என் நம்பிக்கை, மனைவியின் ஸ்தானத்திலே எழுந்த அஞ்ஞானம்தான்!" என்ற பிரமையும் விடவில்லை.

"என் கணவரையும் நம்பக் கூடாதுதான்!" என்ற துளைப்பையும் அவளால் பொறுக்க முடியவில்லை!

"அனாவசியமான சந்தேகம்!" என்ற உறுதி நிலைக்க, களங்கமற்று அவருடன் பழகவும் அவளால் இயலவில்லை.

"ஐயத்தை எச்சரிக்கப்போக, அவளே என்னை எச்சரித்து, இந்த புதிதானவேதனையை உண்டாக்கிவிட்டாளே! ஐயம் இல்லாமல், நாங்கள் மூவரும் நெருங்கிப் பழகினதில், நரசிம்மன் என்னுடன் சகஜமாகப் பழகின விதத்தைப் பார்த்து, என் கணவர் சந்தேகப்பார்வை செலுத்த வேண்டியது போக, காரணமற்ற, ஆதாரமற்ற அவநம்பிக்கை எனக்கு என் கணவர்மீது ஏற்படலாச்சே! சந்தேகம் புகுந்துவிட்ட என் மனம், அவரைச் சோதனை செய்ய முற்படுகிறது. சந்தேகக் கண் குற்றங் காணுகிறது. குற்றங்காணும் நெஞ்சு கடுமையாகப் பேசத் தூண்டுகிறது, ஆனால் அவர்மேல் நம்பிக்கை, அதற்கும் துணிவு தருவதில்லை. சில சமயம் துணிவு ஏற்பட்டு ஏதாவது சொல்லிவிட்டாலும் உடனே பச்சாதாப வேதனையில் மூழ்குகிறது! நான் என் செய்வேன்! கப்பு!" என்று கண்ணீர் உகுந்தாள் பானு!

"வெள்ளை மனம் திரும்புமா?" என்று ஏங்கும் அவள் துயரைத் தீர்க்க, நானும் யோசனையில் ஆழ்ந்தேன். நட்பின் வலிமையால் இழுக்கப்பட்டது விந்தையா?

கடலில் முத்து எடுக்க மூழ்கும் மனிதனுக்கிருக்கக்கூடிய ஆர்வமும், மன உறுதியும் எனக்கு நிச்சயம் இருந்திருக்க வேண்டும் அப்போது. இல்லாவிட்டால், குழம்பிக்கிடந்த என் மனதிற்கு அந்த யோசனை எப்படித்தோன்றியிருக்கும்!

"பானு! அஞ்ஞானம் ஐயத்தை அப்படி நினைக்க வைக்கிறது என்றாய்! உனக்கும் அஞ்ஞானம்தான் கணவனின் குறைபாடுகள் தெரியவில்லை, மனைவியின் ஸ்தானத்திலே ஏமாந்து போகிறாய் என்று நினைத்தாய்! ஆனால் அது தவறு!

"ஐயத்திற்கு கணவன் சுபாவம் நிச்சயம் தெரியும்! மனைவியின் அன்புக்கும் அவையெல்லாம் புலனாகாமலிராது. கொஞ்சமாவது தெரியும், நெருங்கிய உறவால் தன் புருஷன் ஆதரிச புருஷன் என்று ஒரே சாதிப்பாக அவள் சாதிப்பது எதனால் தெரியுமா? கணவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது, அவன் மதிப்பைக் காப்பாற்றணும், உயர்த்தணும் என்ற எண்ணத்தினால்தான்.

"உனக்கு உண்மை தெரியவில்லை! ஏதோ அவள் சொல்வதை ஆதாரமாக ஏற்றுக் கொண்டு, அனாவசியமான யோசனைகளை நீடிக்கச் செய்துவிட்டாய்! "புருஷன் நல்லவனில்லை" என்று உணர்ந்தும் ஐயம் விட்டுக் கொடுக்காமல் நடந்துகொள்ளும் போது, "கணவர் உத்தமர்!" என்று உள்ளூர நினைக்கும் நீ, ஏதோ அஞ்ஞானம், பிரமை என்றெல்லாம் நினைத்து, வலுவிலே வேதனையை எதிர்கொண்டழைத்துவிட்டாயே! இன்னும் கொஞ்சம் நாளாகியிருந்தால், உன் வீண் பிரமை வலுத்தது, நீ உன் உத்தமரான கணவரைக் காரணமின்றி விட்டுக்கொடுத்துப் பிறரிடம் பேசும்படியான நிலைமைகூட ஏற்பட்டிருக்குமே என்று நினைக்கும்போது எனக்கு சிரிப்பதா, அனுதாபப்படுவதா என்றே தெரியவில்லை, பானு!

"நேர்மையற்ற புருஷனின் கௌரவத்திற்குக் குறைவு ஏற்படுவதை விரும்பாத ஐயம் தன் உணர்ச்சிகளை அடக்குவதை எப்போதும் நினைவுப்படுத்திக்கொண்டிரு. இப்போது கலக்கத்திற்குக் காரணமாக இருக்கும் அவளுடைய கடிதமே, வருங்காலத்தில் உனக்கு எந்த நிலைமையையும் சமாளிக்க வழிகாட்டும், மனதை நிலை நிறுத்தும்!" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டேன் நான்.

உணர்ச்சிமேலிட்டு எழுந்து உட்கார்ந்தாள் பானு! "நீ சொல்வது அத்தனையும் உண்மை தாண்டி கப்பு! சட்டென்று என் மனசு பழைய தெளிவுக்கு வந்துவிட்டதே! ஐயத்தின் வார்த்தைகளின் உயர்ந்த லட்சியம் உணர்ந்தேன்!" என்று கண்களில் பழைய குதூகலம் தோன்ற என் கைகளைப் பிடித்தாள்.

அன்றிலிருந்து தனக்கு அஞ்ஞானம் இல்லை, தன் கணவன் உண்மையில்தான் நினைப்பது போல நற்குணங்களின் வடிவானவர்தான் என்ற பழைய நம்பிக்கை அவளுக்கு வந்துவிட்டது சந்தோஷமாயிருக்கிறாள்.

அன்று "ஞானம் வேண்டும்!" என்று அவள் ஆராய்ச்சிகளிலிறங்கி அவதிப்பட்டதை நினைக்கும்போது எனக்கு "கணவனிடம் குற்றங்காணாமல், வேதனையூட்டாமல் நம்மைக் காப்பாற்றக் கூடிய அஞ்ஞானம் நம்மைவிட வேண்டாமே!" என்று அவள் உணராதது, பரிதாபமாயும், வியப்பாகவும் இருக்கிறது!

***********

(சுதேசமித்திரன், ஜனவரி 4, 1948)